சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்.

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.21/2013**

CNR.No.TNDP10-000102-2013

1. ஜானகி
2. வள்ளி

... வாதிகள்

**//எதிராக//**

1. நீலா
2. மூவேந்திரன்
3. ஆர்.வேலு

... பிரதிவாதிகள்

இந்த வழக்கு18.02.2013 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 03.02.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சிவா,எம்.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆ.ஸ்ரீபதிராமன்,பி.ஏ.,எல்.எல்.பி., அவர்கள் ஆஜராகியும், 2 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கிருபாகரன்,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 3 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.நி.மகேஸ்குமார்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலினை செய்தும், வாதுரையை கேட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

1. தாவா சொத்துக்களை நலந்தீது கலந்து 25 சமபாகங்களாக பிரித்து அதில் வாதிகளுக்கு கூட்டாக 12 பாகத்தை ஒதுக்கீடு செய்து, ஒரு முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட 12/25 பாகத்தை வாதிகளுக்கு தனி

Digitally signed by R VIJAYAN Date: 2026.02.17 17:14:12 +0530

R VIJAYAN

சுவாதீனம் செய்து கொடுக்க கோரியும், தாவா சொத்துக்களை எதிர்வாதிகள் வேறு நபர்களுக்கு யாதொரு விற்பனையும் வில்லங்க பாராதீனமும் செய்யாதபடிக்கு எதிர்வாதிகள் பெயரில் ஒரு நிரந்தர உறுத்தக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க கோரியும், தாவா செலவுகள் வாதிகளுக்கு எதிர்வாதிகளால் கிடைக்கும்படி தக்க உத்தரவு பிறப்பிக்க கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த வழக்குரையின் சுருக்கம்</u>**:-

(i) வாதிகள், 1-ம் எதிர்வாதியின் குமார்த்திகளும், 2,3 எதிர்வாதிகளின் சகோதரிகள் ஆவார்கள். இக்கோர்ட்டாரவர்களின் அதிகார எல்லைக்குட்பட்டதும், இதனடியில் தாவா சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ளதுமான தாவா சொத்துக்கள் வாதிகளின் பாட்டனார் ஒரு சாமன் (எ) கொளந்தைகவுண்டர் என்பவருக்கு, பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்துவந்த வருமானத்தைக்கொண்டும், தானிய வியாபாரத்தில் வந்த வருவாயைக்கொண்டும், ஏககுடும்பத்திற்காக வாதிகளின் தகப்பனார் இறந்த ராஜி என்பவர் பெயரில் தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை வாதிகளின் பட்டனார் சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தன் ஒரே மகனான இறந்த ராஜி என்பவர் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களையும், தனது பெயரில் இருந்த சொத்துக்களையும், ஏக குடும்பமாக வாதிகளுடனும், எதிர்வாதிகளுடனும் ஒன்றாக அனுபவித்து வந்து வாதிகளையும், எதிர்வாதிகளையும் வாரிசாக விட்டு விட்டு இப்போதிருந்து சுமார் 6 வருடங்களுக்கு முன்பு சாமன் (எ) கொளந்தை கவுண்டர் இறந்துவிட்டார்.

(ii) தாவா 1 முதல் 4 அயிட்டம் சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்கனவே 3 ம் எதிர்வாதி 2-ம் வாதி மீதும், 2-ம் எதிர்வாதி மீதும், இறந்த ராஜி என்பவர் மீதும் மற்றும் சில நபர்கள் மீது பாகப்பிரிவினைக்காக அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.25/2010 என்ற நெம்பரில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாகவும், இன்னும் இதர சொத்துக்கள் சம்பந்தமாகவும்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:18 +0530

ஊர்பொதுவர்களையும், உறவினர்களையும் வைத்து பாகம்பிரித்துக் கொடுப்பதாகவும், மேற்படி ஒ.எஸ்.25/10 வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும் 2, 3-ம் எதிர்வாதிகளும், வாதிகளின் தகப்பனார் ராஜி என்பவரும் கூறி 3-ம் எதிர்வாதியால் தொடரப்பட்டு வழக்கு 06-09-2012-ந் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. தாவா சொத்துக்கள் சம்பந்தமாக இதுவரை வாதிகளுக்கும், எதிர்வாதிகளுக்கும் யாதொரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை.

(iii) மேற்படி சாமன் (எ) கொளந்தைகவுண்டர் இறந்தபிறகு வாதிகளுடனும், எதிர்வாதிகளுடனும், யாதொரு பாகப்பிரிவினையும், இன்றி சகல பொதுவர்களும் அறிய ஆண்டு அனுபவித்து வந்த வாதிகளின் தந்தையான ராஜி என்பவர் வாதிகளையும், எதிர்வாதிகளையும் வாரிசாக விட்டு,விட்டு ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். வாதிகளும், எதிர்வாதிகளும், தனது பாட்டனாரான சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், தன் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், யாதொரு பாகப்பிரிவினையின்றி நாளது வரையில் சகல பொதுவர்களும் அறிய தாவா சொத்துக்களில் ஜாயின்ட் சுவாதீன அனுபவத்திலிருந்து அனுபவித்து வருகிறார்கள்.

(iv) எதிர்வாதிகள் கடந்த ஒரு வருடமாக விவசாயத்தில் வாதிகளுடன் சரிவர ஒத்துழைப்பதில்லை. 2,3 எதிர்வாதிகள் குடும்பத்தில் ஆண்பிள்ளைகள் என்பதால் கர்த்தா என்ற முறையில் தாவா சொத்துகளில் இருந்து வரும் வருவாயை அவர்களே கவனித்துவந்தார்கள். தாவா சொத்தில் வரும் வருவாயை எதிர்வாதிகளும், இறந்த ராஜி என்பவரும், வாதிகளுக்கு பிரித்துகொடுத்து வந்தார்கள். வாதிகளின் தந்தை ராஜி இறந்தபிறகு 1-ம் எதிர்வாதி 2, 3 எதிர்வாதிகளின் கைப்பாவையாக இருந்துக்கொண்டு தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு கிடைக்க வேண்டிய 12/25 பாகத்தை ஏமாற்றவும், மோசடி செய்யவும், எண்ணங்கொண்டு தாவா சொத்துக்களிலிருந்து வரும் வருவாயை வாதிகளுக்கு பிரித்துக்கொடுக்காமலும், தாவா சொத்தில் இருந்து வரும் வருவாயை



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:21 +0530

வாதிகளுக்கு சரிவர கணக்கு காட்டுவதில்லை. தாவா சொத்துக்களில் இருந்த பல ஜாதி மரங்களை வாதிகளுக்கு தெரியாமல் எதிர்வாதிகள் கடந்த 6 மாதத்திற்கு முன்பு வெட்டி விற்று விட்டார்கள்.

(v) அதனால் வாதிகள் இனியும் எதிர்வாதிகளுடன் சேர்ந்து கூட்டாக சொத்தை அனுபவிக்க இயலாது என்பதால், தங்களுக்கு சேர வேண்டி 12/25 பாகத்தை பிரித்து தனி சுவாதீனம் செய்துக்கொடுக்கும்படி கடந்த 4 மாதமாக எதிர்வாதிகளிடம் கேட்டும், எதிர்வாதிகள் இன்று நாளை என வீண் சாக்குபோக்குகள் சொல்லி காலம் கடத்தி வந்ததார்கள். அதனால் வாதிகள் கடைசியாக ஊர் பொதுவர்களையும், உறவினர்களையும் வைத்தும், தங்களுக்கு சேர வேண்டி 12/25 பாகத்தை பிரித்து தனி சுவாதீனம் செய்துக்கொடுக்கும்படி 20.01.2013-ம் தேதி கேட்டதில் எதிர்வாதிகள் வாதிகளுக்கு சேர வேண்டிய பாகத்தை கொடுக்கமுடியாது என்றும், முடிந்தால் பெற்றுக்கொள்ளட்டும் என்றும், பொதுவர்கள் பேச்சுக்கு கட்டுப்படாமல் சென்றுவிட்டார்கள்.

(vi) எதிர்வாதிகள் வாதிகளுக்கு சேர வேண்டிய 12/25 பாகத்தை மோசடி செய்யும் எண்ணத்தில் வேறு நபர்களுக்கு தாவா சொத்துக்களை விற்கவும், வில்லங்க பாராதீனம் செய்யவும் முயற்சித்து வரும் சங்கதி வாதிகளுக்கு 04.02.2013 ம் தேதியில் தான்செய்தி தெரிந்தது. எதிர்வாதிகள் அவ்வாறு செய்துவிட்டால் வாதிகளுக்கு பாகம் கிடைக்காமல் போய்விடும். எதிர்வாதிகள் இன்னும் இரண்டு ஒரு நாட்களில் வேறு நபர்களுக்கு தாவா சொத்துக்களை விற்காமல் விடுவதில்லை எனவும் ஊரில் பகிரங்கமாக கூறி வருகிறார்கள். எதிர்வாதிகள் எதையும் எப்போதும் செய்ய துணிந்தவர்கள். எதிர்வாதிகளின் அக்கிரம செயலை கனம் கோர்ட்டார் அவர்களின் உத்திரவு மூலம்தான் தடை செய்ய இயலும்.

(vii) தாவா சொத்துக்களில் 1-ம் வாதிக்கு பொதுவில்6/25 பங்கும், 2-ம் வாதிக்கு 6/25



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:24 +0530

பங்கும், 1-ம் எதிர்வாதிக்கு பொதுவில் 1/25 பங்கும் 2 ம் எதிர்வாதிக்கு பொதுவில் 6/25 பங்கும், 3-ம் எதிர்வாதிக்கு பொதுவில் 6/25 பங்கும், பாத்தியமும் சுவாதீனமும் ஆகும். தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எதிர்வாதிகள் வேறு நபர்களுக்கு விற்பனையோ, வில்லங்க பாராதீனமோ செய்திருந்தாலும், இனி செய்தாலும், அவைகள் செல்லாது, வாதிகளை ஒருபோதும் கட்டுப்படுத்ததாது. ஆகவே வாதிகள் இந்த தாவாவை பாகப்பிரிவினைக்கும், தனி சுவாதீனத்திற்கும், நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவும், அவசரமாக தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டது. வாதிகளும் பிரதிவாதிகளும் கூட்டு குடும்பமாக இருப்பதால் நீதிமன்ற கட்டணம் 37(2)ன் படி செலுத்தப்படுகிறது என்று வாதிகள் தனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்.

3. **<u>2 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 1,3 ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>** : -

(i) வாதிகளின் தாவா பொய், கற்பனை மற்றும் மோசடியானது. எனவே மேற்படி தாவா சட்டப்படியும், நியாயப்படியும், நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுண்டு போகத்தக்கது.இந்த 2-ம் பிரதிவாதி இந்த எதிர் வழக்குரை மூலம் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை வாதிகளே சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டவர்கள்.

(ii) தாவா பாரா4 ல் கண்ட சங்கதியில் தாவா சொத்துக்கள் வாதிகளின் பாட்டனால் சாமன் (எ) கொளந்தைகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதும், அவர் தானிய வியாபாரம் செய்து வந்ததாக கூறுவதும் உண்மை. சாமன் (எ) கொளந்தைகவுண்டர் இப்போதிலிருந்து சுமார் 6 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டதாக கூறுவது உண்மை. மற்ற அனைத்து சங்கதிகளும் பொய்யான சங்கதிகளாகும். தாவா பாரா 5 ல் கண்ட சங்கதியில் தாவா 1 முதல் 4 அயிட்டம் சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்கனவே 3 ம் பிரதிவாதி 2 ம் வாதி மீதும், 2 ம் பிரதிவாதி மீதும்

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.17 17:14:27 +0530

இறந்த ராஜி என்பவர் மீதும் மற்றும் சில நபர்கள் மீது பாகப்பிரிவினைக்காக அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.25/2010 என்ற நெம்பரில் வழக்கு தாக்கல் செய்திருந்ததாக கூறுவது உண்மை. மற்ற அனைத்து சங்கதிகளும் பொய்யான சங்கதிகளாகும். தாவா பாரா 6, 7, 8, 9, 10, 11, 12 ல் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் சுத்த பொய் சங்கதிகளாகும். அவ்வாறு கூற வாதிகளுக்கு எவ்வித உரிமையும், சட்டமும், கிடையாது. வாதிகள் பாக தாவா தாக்கல் செய்யவும், பாகம் கோரவும் அவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

(iii) இந்த வழக்கிற்கு வழக்கு மூலமே கிடையாது. வழக்கில் சொல்லப்பட்டுள்ள வழக்கு மூலங்கள் பொய்யும், கற்பனையுமானவையாகும். வாதிகள் கூறுவதுபோல் எந்த வழக்கு மூலமும், ஏற்படவில்லை. அதனாலும், வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யத் தக்கதாகும். இந்த வழக்கிற்கு வாதிகளால் தாவா சொத்துக்களுக்கு செய்யப்பட்டுள்ள சொத்து மதிப்பீடு தவறானவை நீதிமன்ற கட்டணமும், தவறானவை. சட்டப்படி மதிப்பீடு செய்யாமலும், நீதிமன்ற கட்டணம் செலுத்தாமலும், தொடரப்பட்டுள்ள வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். இந்த வழக்கை நடத்த இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை. வாதிகள் உண்மை சங்கதிகளுடன் கனம் நீதிமன்றத்தை அணுகவில்லை. பொய்யான சங்கதிகளை கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அதனால் வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும். இந்த பிரதிவாதி கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யும் உரிமையை இதன் மூலம் ரிசர்வ் செய்துக்கொள்கிறார். வாதிகள் தாவாவில் கோரியுள்ள எப்பரிகாரத்தையும் அடைய அருகர் அல்ல. வாதிகள் தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானவை. அதனாலும், வாதிகளின் தாவா தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

(iv) உண்மை சங்கதிகள் யாதெனில், வாதிகளின் பாட்டனார் இறந்த சாமன் (எ)

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:30 +0530

கொளந்தைகவுண்டரின் பூர்வீகம் செட்ரப்பட்டி கிராமம் ஆகும். இறந்த சாமன் (எ) கொளந்தைகவுண்டரின் உடன் பிறந்த சகோதரி பெரியக்கா (எ) ஆட்டுகார அம்மாள் என்பவரை ஈ.வெளாம்பட்டி கிராமத்தை சேர்ந்த லிங்காகவுண்டருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டது. பெரியக்கா என்பவருக்கு குழந்தைகள் ஏதும் இல்லை. அதனால் பெரியக்கா என்பவர் தனது சகோதரனான சாமன் (எ) கொளந்தைகவுண்டரை விவசாயம் செய்யவும், தனக்கும், அவரது கணவருக்கும் உறுதுணையாக இருக்க வேண்டியும் எ.வெளாம்பட்டி கிராமத்திற்கு சிறுவயதிலேயே அழைத்து வந்து விட்டார் என்பதுதான் உண்மையாகும்.

(v) 2,3 பிரதிவாதிகளின் பாட்டனார் இறந்த சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தனது அக்காள் பெரியக்கா வீட்டில் இருந்துகொண்டு, தானிய வியாபாரம் செய்து அதன் மூலம் வந்த தொகையை கொண்டும், தனது சகோதரியின் குடும்பத்திற்கு விவசாய வேலைகளை பார்த்து வந்ததால், லிங்காகவுண்டர் என்பவர் மைத்துனருக்கு ஒரு சொத்து கொடுத்து உதவ வேண்டுமென கொடுத்த 10.00 ஏக்கர் நிலமும், கொளந்தைகவுண்டருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்தாக்கும். சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதியை 3-ம் பிரதிவாதிக்கு 07.03.2007 தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி தாவா சொத்தான ச.எண்.71/3, 71/5, 78/1 எ, 74/4, 73/3, 73/2, 74/5 பி, 76/2 ஏ நிலங்களை எழுதி பதிவு செய்து சுவாதீனமும் 3-ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார். அதேபோல் ஒரு பகுதியை 2-ம் பிரதிவாதிக்கு 07-03-2007-ந் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி தாவா சொத்தான ச.எண்.76/2 பி, 78/1 பி, 67/1, 71/1 பி நிலங்களை எழுதி பதிவு செய்து சுவாதீனம், 2 ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார். 2,3 பிரதிவாதிகள் தான செட்டில்மெண்ட் பத்திரப்படி தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வாதிகளும், சகல பொதுவர்களும், அறிய பட்டா முதலியவைகளை பெற்று தனிமையான சுவாதீன கந்தாயம்


R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:33 +0530

முதலியவைகளை செலுத்திக்கொண்டு அனுபவத்தில் இருந்து ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். அதில் வாதிகளுக்கு எவ்வித பங்கு பாகமும், உரிமையும் கூட்டு சுவாதீனமும் எப்போதும் கிடையாது.

(vi) 1-ம் பிரதிவாதிக்கு திருமணத்தின் போது அவருடைய தாய்வீட்டார் சீதனமாக போட்ட 10 பவுன் தங்க நகையையும் ஆடுமாடுகளையும் விற்று அதன் மூலம் வந்த தொகையை கொண்டும் தனது பெயரில் தாவா சர்வே எண். (13-வது அயிட்டம்) 71/3 நிலத்தை பொங்கன் (எ) தீர்த்தாகவுண்டர் வகையறாக்களிடம் இருந்து தக்க பிரதி பிரையோஜனத்திற்கும், கிரையமும், சுவாதீனமும் பெற்று அனுபவித்து வந்து தனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை 2-ம் பிரதிவாதி பெயருக்கு 22.01.2013-ந் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி 1-ம் பிரதிவாதி பாத்தியமும், சுவாதீனமும் ஏற்படுத்திக்கொடுத்துவிட்டார். அவையும் பூர்வீக சொத்து அல்ல. 2 ம் பிரதிவாதியின் பாட்டனார் சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் செட்ரப்பட்டி கிராமத்தில் இருந்து வருகிறது. வாதிகள் அவற்றை மறைத்து இந்த பிரதிவாதிகளை மிரட்டி பணம் பறிக்க வேண்டி இந்த பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள்.

(vii) இந்த 2,3 பிரதிவாதிகள் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தனது சகோதரிகளான வாதிகளுக்கு தலா ரூ.1,50,000/- 1-ம் ரொக்கமாக கொடுத்துள்ளார்கள். 1-ம் வாதிக்கு 1984-ல் திருமணம் செய்துக்கொடுக்கப்பட்டு கொடுக்கப்பட்டு அவருடைய கணவருடன் அப்பியம்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் நல்லமுறையில் வாழ்ந்து வருகிறார். அதேபோல் 2-ம் பிரதிவாதிக்கு 1991-ம் வருடம் திருமணம் செய்துக்கொடுக்கப்பட்டு ஈரோட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். வாதிகளுக்கு திருமணத்தின் போது ஒவ்வொருவருக்கும் தலா 30 பவுன் தங்க நகையும், இரு சக்கர வாகனங்களும், சீர்வரிசைகளும், செய்துக்கொடுத்துள்ளார்கள். தாவா சொத்துக்கள் 2,3



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:36 +0530

பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் படி பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். தாவா சொத்துக்களில் பாகம் கோரவும், உரிமை கொண்டாடவும், வாதிகளுக்கு எவ்வித தகுதிபாடும் கிடையாது.

(viii) தாவா 1 முதல் 3 அயிட்டம் சொத்துக்களும், 2,3 பிரதிவாதிகளின் நிம்மதியான சுவாதீன அனுபவத்தில் இருந்து, வருகிறது. தாவா சொத்துக்கள் பேரில் 2,3 பிரதிவாதிகள் அரூர் இந்தியன் வங்கியில் பல லட்சங்கள் கடன் பெற்று விவசாய அபிவிருத்திகளை செய்துள்ளார்கள். அந்த வங்கி கடன்களையும், 2,3 பிரதிவாதிகள் தான் கட்டி தீர்த்துள்ளார்கள். மேற்படி உண்மை சங்கதிகளை மறைத்து வாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

(ix) 2,3 பிரதிவாதிகளின் பாட்டனார் சாமன் (எ) கொளந்தைகவுண்டர் அவர் சுயார்ஜிதமாக சம்பாதித்த சுயார்ஜித சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே 2,3 பிரதிவாதிகள் பெயரில் தானம் எழுதிவைத்து விட்டார். 2,3 பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்த ராஜி வாதிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு 2,3 பிரதிவாதிகளின் கடுமையான உழைப்பின் மூலம் பல லட்சம் செலவு செய்து நிரவல் செய்து வைத்திருந்த தாவா 1 முதல் 4 அயிட்டம் சொத்துக்களை விற்கவும், மோசடி செய்யவும், எத்தனித்ததால் 3-ம் பிரதிவாதி ஒ.எஸ்.25/2010 வழக்கை தாக்கல் செய்திருந்தார். 2,3 பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்த ராஜி என்பவர் தாவா 1 முதல் 3 அயிட்டம் சொத்துக்களை 2,3 பிரதிவாதிகளுக்கு பாகமாக விட்டு விட்டார். தாவா 4-வது அயிட்டம், சொத்தினை விற்று வாதிகள் வெளியூரில் வசிப்பதால், அதன் மூலம் வந்த தொகையை வாதிகளின் பாகத்திற்காக வாதிகளுக்கு கொடுத்துவிட்டார் என்பதுதான் உண்மை. வாதிகளின் தகப்பனார் இராஜி இறந்த பிறகு மீண்டும் அக்கிரம லாபமடைய வேண்டி வாதிகள் பொய் தாவா தாக்கல் செய்துள்ளார்கள். ஆகையால், கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு கூர்ந்து வாதிகளின் வழக்கை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 2 ம் பிரதிவாதி தனது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:38 +0530

பதிலுரையில் கூறியுள்ளார்.

**4. <u>வாதிகள் தாக்கல் செய்த வழக்குரை, பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்கண்ட எழுவினாக்கள் கடந்த 11.01.2016 ம் தேதியில் வனையப்பட்டன.</u>**

**1. தாவா சொத்தானது தாவா தரப்பினர்களுக்கு இடையே பாகப்பிரிவினைக்கு உட்படுத்த தக்க சொத்தா ?**

**2. அவ்வாறெனில், தாவா சொத்து 25 சமபாகங்களாக பிரிக்கப்பட்டு, அதில் வாதிகள் கூட்டாக 12 பாகங்கள் ஒதுக்கீடு பெற்று சுவாதீனம் பெற அருகரா ?**

**3. தாவா சொத்தினை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக, தாவா சொத்தினை வில்லங்க, பாராதீனங்களுக்கு உட்படுத்தாமல் இருக்க வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற அருகரா ?**

**4. வாதி தரப்பினர்களுக்கு இடையே கிடைக்கத்தக்க பரிகாரம் என்ன ?**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பற்றிய விபரங்கள்</u> :-**

5. வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 2 ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆகவும், ஒரு கோதண்டன் என்பவர் பி.வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. தாவா சொத்துக்கள் என்பது தருமபுரி ரிடி, அரூர் சப்ரிடி, எச்.அக்ராகரம் தரப்பு, எ.வெளாம்பட்டி கிராம

1. சர்வே எண்.72 பு.ஹெக். 3.41.0 க்கு தீர்வை 4.19 மதிப்பு ரூ.2,00,000.00

2. சர்வே எண்.73/1 பு.ஹெக். 1.20.5 க்கு தீர்வை 1.50 மதிப்பு ரூ.80,000.00

3. சர்வே எண்.74/1 பு.ஹெக். 0.69.5 க்கு தீர்வை 1.06 மதிப்பு ரூ.50,000.00

4. சர்வே எண்.71/4 பு.ஹெக். 0.43.0 க்கு தீர்வை 0.56 மதிப்பு ரூ.30,000.00



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:41 +0530

சர்வே எண்.72 ல் உள்ள இரண்டு கிணற்றின் மதிப்பு ரூ.20,000.00

மின் மோட்டார் 2 ன் மதிப்பு ரூ.10,000.00

இதில் உள்ள பில்லை வீட்டின் மதிப்பு ரூ.30,000.00

5. சர்வே எண்.71/3 பு.ஹெக். 0.41.0 க்கு தீர்வை 0.50 மதிப்பு ரூ.30,000.00

6. சர்வே எண்.71/5 பு.ஹெக். 0.41.5 க்கு தீர்வை 0.50 மதிப்பு ரூ.30,000.00

7. சர்வே எண்.73/2 பு.ஹெக். 1.18.0 க்கு தீர்வை 1.44 மதிப்பு ரூ.90,000.00

8. சர்வே எண்.74/4 பு.ஹெக். 0.85.50 க்கு தீர்வை 1.36 மதிப்பு ரூ.70,000.00

9. சர்வே எண்.74/5 பி பு.ஹெக். 0.13.50 க்கு தீர்வை 0.21 மதிப்பு ரூ.20,000.00

10. சர்வே எண்.76/2 எ பு.ஹெக். 0.4.00 க்கு தீர்வை 0.06 மதிப்பு ரூ.6,000.00

11. சர்வே எண்.71/2 பி பு.ஹெக். 0.70.0 க்கு தீர்வை 87.00 மதிப்பு ரூ.60,000.00

12. சர்வே எண்.76/2 பி பு.ஹெக். 0.54.0 க்கு தீர்வை 0.67 மதிப்பு ரூ.50,000.00

13. சர்வே எண்.73/3 பு.ஹெக். 0.64.50 க்கு தீர்வை 0.81 மதிப்பு ரூ.60,000.00

14. சர்வே எண்.78/1 எ பு.ஹெக். 1.04.5 க்கு தீர்வை 1.60 மதிப்பு ரூ.90,000.00

15. சர்வே எண்.67/1 பு.ஹெக். 1.01.0 க்கு தீர்வை 1.54 மதிப்பு ரூ.90,000.00

தாவா சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.10,16,000.00

வாதிகளின் 12/25 பாக மதிப்பு ரூ.4,87,880.00

**<u>எழுவினா-1 மற்றும் எழுவினா-2 : -</u>**

7. எழுவினா-1 மற்றும் எழுவினா-2 ஆகியன ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருப்பதால் அவை இரண்டும் ஒரு சேர எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**1. தாவா சொத்தானது தாவா தரப்பினர்களுக்கு இடையே பாகப்பிரிவினைக்கு உட்படுத்த தக்க சொத்தா ?**

**2. அவ்வாறெனில், தாவா சொத்து 25 சமபாகங்களாக பிரிக்கப்பட்டு, அதில் வாதிகள் கூட்டாக 12 பாகங்கள் ஒதுக்கீடு பெற்று சுவாதீனம் பெற அருகரா ?**

8. வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இக்கோர்ட்டாரவர்களின் அதிகார எல்லைக்குட்பட்டதும், இதனடியில் தாவா சொத்து விவரத்தில்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:44 +0530

விவரிக்கப்பட்டுள்ளதுமான தாவா சொத்துக்கள் வாதிகளின் பாட்டனார் ஒரு சாமன் (எ) கொளந்தைகவுண்டர் என்பவருக்கு, பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்துவந்த வருமானத்தைக்கொண்டும், தானிய வியாபாரத்தில் வந்த வருவாயைக்கொண்டும், ஏககுடும்பத்திற்காக வாதிகளின் தகப்பனார் இறந்த ராஜி என்பவர் பெயரில் தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை வாதிகளின் பட்டனார் சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தன் ஒரே மகனான இறந்த ராஜி என்பவர் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களையும், தனது பெயரில் இருந்த சொத்துக்களையும், ஏக குடும்பமாக வாதிகளுடனும், எதிர்வாதிகளுடனும் ஒன்றாக அனுபவித்து வந்து வாதிகளையும், எதிர்வாதிகளையும் வாரிசாக விட்டு விட்டு இப்போதிருந்து சுமார் 6 வருடங்களுக்கு முன்பு சாமன் (எ) கொளந்தை கவுண்டர் இறந்துவிட்டார் என்றும், தாவா 1 முதல் 4 அயிட்டம் சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்கனவே 3ம் எதிர்வாதி 2-ம் வாதி மீதும், 2-ம் எதிர்வாதி மீதும், இறந்த ராஜி என்பவர் மீதும் மற்றும் சில நபர்கள் மீது பாகப்பிரிவினைக்காக அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.25/2010 என்ற நெம்பரில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்படி வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாகவும், இன்னும் இதர சொத்துக்கள் சம்பந்தமாகவும் ஊர்பொதுவர்களையும், உறவினர்களையும் வைத்து பாகம்பிரித்துக் கொடுப்பதாகவும், மேற்படி ஒ.எஸ்.25/10 வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும் 2, 3-ம் எதிர்வாதிகளும், வாதிகளின் தகப்பனார் ராஜி என்பவரும் கூறி 3-ம் எதிர்வாதியால் தொடரப்பட்டு வழக்கு 06-09-2012-ந் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், தாவா சொத்துக்கள் சம்பந்தமாக இதுவரை வாதிகளுக்கும், எதிர்வாதிகளுக்கும் யாதொரு பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றும், மேற்படி சாமன் (எ) கொளந்தைகவுண்டர் இறந்தபிறகு வாதிகளுடனும், எதிர்வாதிகளுடனும், யாதொரு பாகப்பிரிவினையும், இன்றி சகல பொதுவர்களும் அறிய ஆண்டு அனுபவித்து வந்த வாதிகளின் தந்தையான



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:46 +0530

ராஜி என்பவர் வாதிகளையும், எதிர்வாதிகளையும் வாரிசாக விட்டு,விட்டு ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், வாதிகளும், எதிர்வாதிகளும், தனது பாட்டனாரான சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், தன் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், யாதொரு பாகப்பிரிவினையின்றி நாளது வரையில் சகல பொதுவர்களும் அறிய தாவா சொத்துக்களில் ஜாயின்ட் சுவாதீன அனுபவத்திலிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும்,

9. எதிர்வாதிகள் கடந்த ஒரு வருடமாக விவசாயத்தில் வாதிகளுடன் சரிவர ஒத்துழைப்பதில்லை என்றும், 2,3 எதிர்வாதிகள் குடும்பத்தில் ஆண்பிள்ளைகள் என்பதால் கர்த்தா என்ற முறையில் தாவா சொத்துகளில் இருந்து வரும் வருவாயை அவர்களே கவனித்துவந்தார்கள் என்றும், தாவா சொத்தில் வரும் வருவாயை எதிர்வாதிகளும், இறந்த ராஜி என்பவரும், வாதிகளுக்கு பிரித்துகொடுத்து வந்தார்கள் என்றும், வாதிகளின் தந்தை ராஜி இறந்தபிறகு 1-ம் எதிர்வாதி 2, 3 எதிர்வாதிகளின் கைப்பாவையாக இருந்துக்கொண்டு தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு கிடைக்க வேண்டிய 12/25 பாகத்தை ஏமாற்றவும், மோசடி செய்யவும், எண்ணங்கொண்டு தாவா சொத்துக்களிலிருந்து வரும் வருவாயை வாதிகளுக்கு பிரித்துக்கொடுக்காமலும், தாவா சொத்தில் இருந்து வரும் வருவாயை வாதிகளுக்கு சரிவர கணக்கு காட்டுவதில்லை என்றும், தாவா சொத்துக்களில் இருந்த பல ஜாதி மரங்களை வாதிகளுக்கு தெரியாமல் எதிர்வாதிகள் கடந்த 6 மாதத்திற்கு முன்பு வெட்டி விற்று விட்டார்கள் என்றும், அதனால் வாதிகள் இனியும் எதிர்வாதிகளுடன் சேர்ந்து கூட்டாக சொத்தை அனுபவிக்க இயலாது என்பதால், தங்களுக்கு சேர வேண்டி 12/25 பாகத்தை பிரித்து தனி சுவாதீனம் செய்துக்கொடுக்கும்படி கடந்த 4 மாதமாக எதிர்வாதிகளிடம் கேட்டும், எதிர்வாதிகள் இன்று நாளை என வீண் சாக்குபோக்குகள் சொல்லி காலம் கடத்தி வந்ததார்கள் என்றும், அதனால் வாதிகள் கடைசியாக ஊர் பொதுவர்களையும், உறவினர்களையும்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.17 17:14:49 +0530

வைத்தும், தங்களுக்கு சேர வேண்டி 12/25 பாகத்தை பிரித்து தனி சுவாதீனம் செய்துக்கொடுக்கும்படி 20.01.2013-ம் தேதி கேட்டதில் எதிர்வாதிகள் வாதிகளுக்கு சேர வேண்டிய பாகத்தை கொடுக்கமுடியாது என்றும், முடிந்தால் பெற்றுக்கொள்ளட்டும் என்றும், பொதுவர்கள் பேச்சுக்கு கட்டுப்படாமல் சென்றுவிட்டார்கள் என்றும்,

10. எதிர்வாதிகள் வாதிகளுக்கு சேர வேண்டிய 12/25 பாகத்தை மோசடி செய்யும் எண்ணத்தில் வேறு நபர்களுக்கு தாவா சொத்துக்களை விற்கவும், வில்லங்க பாராதீனம் செய்யவும் முயற்சித்து வரும் சங்கதி வாதிகளுக்கு 04.02.2013 ம் தேதியில் தான்செய்தி தெரிந்தது என்றும், எதிர்வாதிகள் அவ்வாறு செய்துவிட்டால் வாதிகளுக்கு பாகம் கிடைக்காமல் போய்விடும் என்றும், எதிர்வாதிகள் இன்னும் இரண்டு ஒரு நாட்களில் வேறு நபர்களுக்கு தாவா சொத்துக்களை விற்காமல் விடுவதில்லை எனவும் ஊரில் பகிரங்கமாக கூறி வருகிறார்கள் என்றும், எதிர்வாதிகள் எதையும் எப்போதும் செய்ய துணிந்தவர்கள் என்றும், எதிர்வாதிகளின் அக்கிரம செயலை கனம் கோர்ட்டார் அவர்களின் உத்திரவு மூலம்தான் தடை செய்ய இயலும் என்றும், தாவா சொத்துக்களில் 1ம் வாதிக்கு பொதுவில் 6/25 பங்கும், 2-ம் வாதிக்கு 6/25 பங்கும், 1-ம் எதிர்வாதிக்கு பொதுவில் 1/25 பங்கும் 2 ம் எதிர்வாதிக்கு பொதுவில் 6/25 பங்கும், 3-ம் எதிர்வாதிக்கு பொதுவில் 6/25 பங்கும், பாத்தியமும் சுவாதீனமும் ஆகும் என்றும், தாவா சொத்துக்கள் சம்மந்தமாக எதிர்வாதிகள் வேறு நபர்களுக்கு விற்பனையோ, வில்லங்க பாராதீனமோ செய்திருந்தாலும், இனி செய்தாலும், அவைகள் செல்லாது, வாதிகளை ஒருபோதும் கட்டுப்படுத்ததாது என்றும், ஆகவே வாதிகள் இந்த தாவாவை பாகப்பிரிவினைக்கும், தனி சுவாதீனத்திற்கும், நிரந்தர உறுத்துக்கட்டளைக்காகவும், அவசரமாக தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் நேரிட்டது என்றும் வாதி தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

11. வாதி தரப்பு வழக்கறிஞர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பான



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:51 +0530

2025 (4)TLNJ 15 (Civil) என்ற முன்தீர்ப்பினை சுட்டிகாட்டியுள்ளார்.

12. பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், தாவா சொத்துக்கள் வாதிகளின் பாட்டனார் சாமன் (எ) குழந்தைக்கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவர் தானிய வியாபாரம் செய்து வருவதாகவும் கூறுவது உண்மை என்றும், ஏக குடும்பத்திற்காக வேண்டி வாதிகளின் தகப்பனார் இறந்த ராஜி என்பவரின் பெயரில் தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை வாதியின் பாட்டனார் சாமன் (எ) குழந்தை கவுண்டர் தன் ஒரே மகனான இறந்த ராஜி என்பவர் பெயரில் கிரையம் பெற்றதாக சொல்லுவது பொய் என்றும், தாவா சொத்துக்களை ஏககுடும்பமாக வாதிகள் எதிர்வாதிகளுடன் ஒன்றாக அனுபவித்து வந்ததாக சொல்லுவதும் பொய் என்றும், அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.25/2010 என்ற வழக்கை பாகப்பிரிவினைக்காக 3ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி மீதும், இறந்த ராஜி என்பவர் மீதும் தாக்கல் செய்து அந்த வழக்கில் வாதிகளுக்கு உரிய பாகத்தை பிரித்து கொடுப்பதாக இறந்த ராஜி சொல்லியதாக கூறியது தவறு என்றும், மேற்படி வழக்கானது சர்வே எண்.71/4 நிலத்தை பொறுத்து மொரப்பூரை சேர்ந்த சில நபர்களுக்கு கிரையம் செய்து அவை மனைகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டார்கள். அப்போது வாதிகள் அவர்களுக்கு பாகத்திற்கு வேண்டி தலா ரூ.1,50,000/-ம் பெற்றுக்கொண்டு தான் கையொப்பம் செய்தார்கள். அதனால் தான் மேற்படி வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்றும்,

13. வாதிகளின் பாட்டனார் இறந்த சாமன் (எ) கொளந்தைகவுண்டரின் பூர்வீகம் செட்ரப்பட்டி கிராமம் ஆகும் என்றும், இறந்த சாமன் (எ) கொளந்தைகவுண்டரின் உடன் பிறந்த சகோதரி பெரியக்கா (எ) ஆட்டுகார அம்மாள் என்பவரை ஈ.வெளாம்பட்டி கிராமத்தை சேர்ந்த லிங்காகவுண்டருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றும், பெரியக்கா என்பவருக்கு குழந்தைகள் ஏதும் இல்லை என்றும், அதனால் பெரியக்கா



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:54 +0530

என்பவர் தனது சகோதரனான சாமன் (எ) கொளந்தைகவுண்டரை விவசாயம் செய்யவும், தனக்கும், அவரது கணவருக்கும் உறுதுணையாக இருக்க வேண்டியும் எ.வெளாம்பட்டி கிராமத்திற்கு சிறுவயதிலேயே அழைத்து வந்து விட்டார் என்பதுதான் உண்மையாகும் என்றும், 2,3 பிரதிவாதிகளின் பாட்டனார் இறந்த சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தனது அக்காள் பெரியக்கா வீட்டில் இருந்துகொண்டு, தானிய வியாபாரம் செய்து அதன் மூலம் வந்த தொகையை கொண்டும், தனது சகோதரியின் குடும்பத்திற்கு விவசாய வேலைகளை பார்த்து வந்ததால், லிங்காகவுண்டர் என்பவர் மைத்துனருக்கு ஒரு சொத்து கொடுத்து உதவ வேண்டுமென கொடுத்த 10.00 ஏக்கர் நிலமும், கொளந்தைகவுண்டருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும்,

14. சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதியை 3-ம் பிரதிவாதிக்கு 07.03.2007 தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி தாவா சொத்தான ச.எண்.71/3, 71/5, 78/1 எ, 74/4, 73/3, 73/2, 74/5 பி, 76/2 ஏ நிலங்களை எழுதி பதிவு செய்து சுவாதீனமும் 3-ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும், அதேபோல் ஒரு பகுதியை 2-ம் பிரதிவாதிக்கு 07-03-2007-ந் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி தாவா சொத்தான ச.எண்.76/2 பி, 78/1 பி, 67/1, 71/1 பி நிலங்களை எழுதி பதிவு செய்து சுவாதீனம், 2 ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும், 2,3 பிரதிவாதிகள் தான செட்டில்மெண்ட் பத்திரப்படி தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை வாதிகளும், சகல பொதுவர்களும், அறிய பட்டா முதலியவைகளை பெற்று தனிமையான சுவாதீன கந்தாயம் முதலியவைகளை செலுத்திக்கொண்டு அனுபவத்தில் இருந்து ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றும், அதில் வாதிகளுக்கு எவ்வித பங்கு பாகமும், உரிமையும் கூட்டு சுவாதீனமும் எப்போதும் கிடையாது என்றும்,

15. 1-ம் பிரதிவாதிக்கு திருமணத்தின் போது அவருடைய தாய்வீட்டார் சீதனமாக

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:56 +0530

போட்ட 10 பவுன் தங்க நகையையும் ஆடுமாடுகளையும் விற்று அதன் மூலம் வந்த தொகையை கொண்டும் தனது பெயரில் தாவா சர்வே எண்.(13-வது அயிட்டம்) 71/3 நிலத்தை பொங்கன் (எ) தீர்த்தாகவுண்டர் வகையறாக்களிடம் இருந்து தக்க பிரதி பிரையோஜனத்திற்கும், கிரையமும், சுவாதீனமும் பெற்று அனுபவித்து வந்து தனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை 2-ம் பிரதிவாதி பெயருக்கு 22.01.2013-ந் தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரப்படி 1-ம் பிரதிவாதி பாத்தியமும், சுவாதீனமும் ஏற்படுத்திக்கொடுத்துவிட்டார் என்றும், அவையும் பூர்வீக சொத்து அல்ல என்றும், 2 ம் பிரதிவாதியின் பாட்டனார் சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் செட்ரப்பட்டி கிராமத்தில் இருந்து வருகிறது என்றும், வாதிகள் அவற்றை மறைத்து இந்த பிரதிவாதிகளை மிரட்டி பணம் பறிக்க வேண்டி இந்த பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இந்த 2,3 பிரதிவாதிகள் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு தனது சகோதரிகளான வாதிகளுக்கு தலா ரூ.1,50,000/- 1-ம் ரொக்கமாக கொடுத்துள்ளார்கள் என்றும், 1-ம் வாதிக்கு 1984-ல் திருமணம் செய்துக்கொடுக்கப்பட்டு கொடுக்கப்பட்டு அவருடைய கணவருடன் அப்பியம்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் நல்லமுறையில் வாழ்ந்து வருகிறார் என்றும், அதேபோல் 2-ம் பிரதிவாதிக்கு 1991-ம் வருடம் திருமணம் செய்துக்கொடுக்கப்பட்டு ஈரோட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றும், வாதிகளுக்கு திருமணத்தின் போது ஒவ்வொருவருக்கும் தலா 30 பவுன் தங்க நகையும், இரு சக்கர வாகனங்களும், சீர்வரிசைகளும், செய்துக்கொடுத்துள்ளார்கள் என்றும், தாவா சொத்துக்கள் 2,3 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் படி பாத்தியப்பட்ட சொத்துக்களாகும் என்றும், தாவா சொத்துக்களில் பாகம் கோரவும், உரிமை கொண்டாடவும், வாதிகளுக்கு எவ்வித தகுதிபாடும் கிடையாது என்றும்,

16. தாவா 1 முதல் 3 அயிட்டம் சொத்துக்களும், 2,3 பிரதிவாதிகளின் நிம்மதியான



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:14:59 +0530

சுவாதீன அனுபவத்தில் இருந்து, வருகிறது என்றும், தாவா சொத்துக்கள் பேரில் 2,3 பிரதிவாதிகள் அரூர் இந்தியன் வங்கியில் பல லட்சங்கள் கடன் பெற்று விவசாய அபிவிருத்திகளை செய்துள்ளார்கள் என்றும், அந்த வங்கி கடன்களையும், 2,3 பிரதிவாதிகள் தான் கட்டி தீர்த்துள்ளார்கள் என்றும், மேற்படி உண்மை சங்கதிகளை மறைத்து வாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், 2,3 பிரதிவாதிகளின் பாட்டனார் சாமன் (எ) கொளந்தைகவுண்டர் அவர் சுயார்ஜிதமாக சம்பாதித்த சுயார்ஜித சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே 2,3 பிரதிவாதிகள் பெயரில் தானம் எழுதிவைத்து விட்டார் என்றும், 2,3 பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்த ராஜி வாதிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு 2,3 பிரதிவாதிகளின் கடுமையான உழைப்பின் மூலம் பல லட்சம் செலவு செய்து நிரவல் செய்து வைத்திருந்த தாவா 1 முதல் 4 அயிட்டம் சொத்துக்களை விற்கவும், மோசடி செய்யவும், எத்தனித்ததால் 3-ம் பிரதிவாதி ஒ.எஸ்.25/2010 வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றும், 2,3 பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்த ராஜி என்பவர் தாவா 1 முதல் 3 அயிட்டம் சொத்துக்களை 2,3 பிரதிவாதிகளுக்கு பாகமாக விட்டு விட்டார். தாவா 4-வது அயிட்டம், சொத்தினை விற்று வாதிகள் வெளியூரில் வசிப்பதால், அதன் மூலம் வந்த தொகையை வாதிகளின் பாகத்திற்காக வாதிகளுக்கு கொடுத்துவிட்டார் என்பதுதான் உண்மை என்றும், வாதிகளின் தகப்பனார் இராஜி இறந்த பிறகு மீண்டும் அக்கிரம லாபமடைய வேண்டி வாதிகள் பொய் தாவா தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், ஆகையால், கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு கூர்ந்து வாதிகளின் வழக்கை அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டுள்ளார்.

17. இவ்வழக்கின் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், தாவா சொத்துக்களானது தங்களின் பாட்டனார்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.17 17:15:02 +0530

ஒரு சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டும், தானிய வியாபாரத்தில் வந்த வருமானத்தை கொண்டும், ஏக குடும்பத்திற்காக தங்களது தகப்பனார் இறந்த ராஜி என்பவரின் பெயரில் தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை தங்களின் பாட்டனர் சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தன் ஒரே மகனான இறந்த ராஜி என்பவர் பெயரில் கிரையம் பெறப்பட்ட சொத்துக்களையும் தன் பெயரில் இருந்த சொத்துக்களையும் ஏக குடும்பமாக தங்களுடனும், எதிர்வாதிகளுடன் ஒன்றாக அனுபவித்து வந்து தங்களையும், எதிர்வாதிகளையும் வாரிசாக விட்டுவிட்டு தாவா தாக்கல் செய்ததிலிருந்து 6 வருடங்களுக்கு முன்னர் குழந்தைகவுண்டர் என்பவர் இறந்துவிட்டதாகவும், வாதிகளின் தகப்பனாரும் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2,3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான ராஜி என்பவர் தாவா தாக்கல் செய்ததற்கு ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டதாகவும், அவர் உயிருடன் இருக்கும்போது அவரின் சொத்தை பொறுத்து எந்தவித ஏற்பாடும் செய்யப்படாமல் முறையான பாகப்பிரிவினை ஏற்படாமல் இறந்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். வாதிகள் தங்களது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போலவும், வா.சா.1 சாட்சியமளித்துள்ளது போலவும் தாவா சொத்துக்கள் தங்களது பாட்டனார் சாமன் (எ) கொளந்தைகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்தும் தானிய வியாபாரத்தில் வந்த வருமானத்தை கொண்டும் தாவா சொத்துக்களின் ஒரு பகுதியை தனது மகனான ராஜி கவுண்டர் பெயரில் கிரையம் பெற்றார் என்று சொல்லுவதற்கு எந்த ஆவணங்களும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ஏற்கனவே வாதிகளின் தாத்தாவான சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்பதை காட்டவும் அதிலிருந்து வந்த வருமானத்தை கொண்டு தாவா சொத்துக்களின் ஒரு பகுதி கிரையம் பெறப்பட்டது என்பதை காண்பிக்கவும் வாதிகள் தரப்பில் எந்தவிதமான பதிவு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:04 +0530

செய்யப்பட்ட கிரைய ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

18. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் தாவா சொத்துக்கள் வாதிகளின் பாட்டனார் சாமன் (எ) கொளந்தைகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர். பிரதிவாதிகளும் தாவா சொத்துக்கள் முழுவதும் சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்பதற்கும் அல்லது இறந்துபோன 1ம் பிரதிவாதியின் கணவர், 2,3 பிரதிவாதிகளின் தந்தை ராஜி என்பவர் பெயரில் தனிப்பட்ட சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளது என்பதை காண்பிக்கவும் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

19. மேலும் வாதிகளே தங்களது வழக்குரையில் தாவா சொத்தின் ஒரு பகுதியை சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தன் ஒரே மகனான இறந்த ராஜி என்பவர் பெயரில் கிரையம் பெற்றதாக கூறியுள்ளனர். அதனை வைத்து பார்க்கும்போது ஏற்கனவே சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை அவர் சொந்தமாக வைத்திருந்தார் என்பதை வாதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளின் தாத்தா மற்றும் 2,3 பிரதிவாதிகளின் தாத்தா சாமன் (எ) கொளந்தைகவுண்டர் சகோதரி பெரியக்கா (எ) ஆட்டுக்காரம்மாள் என்பவரை ஏ.வெள்ளாளப்பட்டி கிராமத்தை சேர்ந்த லிங்கா கவுண்டருக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டதால் அவர் சகோதரிக்கு உறுதுணையாக இருக்க ஏ.வெள்ளாளப்பட்டி கிராமத்திற்கே சிறு வயதாக இருக்கும்போதே சென்று விட்டார் என்றும், சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தனது பெரியக்கா வீட்டிலேயே தங்கி விவசாய வேலைகளை செய்து வந்ததாலும், தான் வியாபாரம் செய்து அதன் மூலம் வந்த தொகையை கொண்டும் லிங்கா கவுண்டர் தனது மைத்துனரான சாமன் (எ) கொளந்தைகவுண்டருக்கு 10 ஏக்கர் நிலத்தை வாங்கியதாகவும் பதிலுரையில் கூறியுள்ளனர். ஆகவே சாமன் (எ)

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:07 +0530

கொளந்தைகவுண்டருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் இருந்துள்ளது. வாதி மற்றும் பிரதிவாதிகளின் வாதுரையிலிருந்து தெரியவருகிறது.

20. வாதிகள் மற்றும் 2, 3 பிரதிவாதிகளின் தாத்தா சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தாவா தாக்கல் செய்யப்படுவதற்கு 6 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார் என்று இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி சாமன் (எ) கொளந்தைகவுண்டர் உயிருடன் இருக்கும்போது 3ம் பிரதிவாதியான வேலு என்பவருக்கு 07.03.2007ம் தேதியில் அரூர் சார்பதிவாளர் அலுவலக தானசெட்டில்மெண்ட் பத்திரஎண்.625/2007 என்ற ஆவணத்தின்படி தருமபுரி பதிவு மாவட்டம், அரூர் சார்பதிவு மாவட்டம், அக்ராகரம் தரப்பு ஏ.வெள்ளாளப்பட்டி கிராமம், ச.எண்.1 கரிச 76/2B புஞ்சை ஹெக்டேர் 0.54.0 தீர்வை 1.30 இதற்கு சரியான ஏக்கர் 1.33 முழுவதும், 2. கரிச 78/1B புஞ்சை ஹெக்டேர் 1.36.0 தீர்வை 3.40 இதற்கான சரியான ஏக்கர் 3.36 இது முழுவதும். 3. கரிச 67/1 புஞ்சை ஹெக்டேர் 1.01.0 தீர்வை 2.00 இதற்கு சரியான ஏக்கர் 2.50 இது முழுவதும். மொத்தம் 7.19 ஏக்கர் ஆகியவை தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்களில் ச.எண்.76/2B, 67/1 ஆகியவை தாவா சொத்துவிவரத்தில் அயிட்டம் **12 மற்றும் 15 ஆக தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது**.

21. மேலும் தாவா சொத்து விவரத்தில் 5 வது அயிட்ட சொத்தான ச.எண்.71/3 காணும் சொத்தானது 1ம் பிரதிவாதியானவர் 08.11.1979ம் தேதிய கிரைய ஆவணத்தின் மூலம் தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி தேதியகிரைய ஆவணத்தில் மேற்படி ச.எண்.71/3 ல் 1.01 ஏக்கரும் அதுமட்டுமல்லாமல் 71/1B சர்வே எண்ணில் 1.73 ஏக்கரும் கிரையம் பெற்றுள்ளார். மேலும் 1ம் பிரதிவாதி 03.05.1994 கிரைய ஆவணத்தின்படி 71/1A என்ற ச.எண்ணில் 1.65 ஏக்கர் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். அந்த சொத்துக்கள் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று கூறுவது ஏற்புடையதாக

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:09 +0530

இல்லை. அவை 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்படி 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்ற சொத்துக்களை 22.01.2013 ம் தேதியன்று 2 ம் பிரதிவாதியான மூவேந்திரன் என்பவருக்கு அரூர் சார்பதிவாளர் அலுவலக தானசெட்டில்மெண்ட் ஆவணஎண்.214/2013 ன்படி எழுதிகொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி சொத்துக்களை கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று கருத முடியாது.

22. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் 07.03.2007 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி சாமன் (எ) கொளந்தைகவுண்டர் தனக்கு பாத்தியப்பட்ட பகுதிகளை 3 ம் பிரதிவாதியான வேலு என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றும், அவை தாவா சர்வே எண்கள்.71/3, 71/5, 78/1A, 74/4, 73/3, 73/2, 74/5B, 76/2A என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 பட்டா எண்.73 ன்படி 3 ம் பிரதிவாதி வேலு என்பவருக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கள் தாவாவில் அயிட்டம் 5, 6, 14, 8, 13, 7, 9, 10 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கள் வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகளின் தந்தை ராஜி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பதை காட்ட வாதி தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே மேற்படிய சொத்துக்களும் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்று கருத முடியாது. அது பிரதிவாதிகள் கூறுவது போல ராஜி என்பவரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

23. தாவா சொத்துக்களில் 11 வது அயிட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.71/2B புஞ்சை ஹெக்டேர் 0.54.0 தீர்வை 0.67 என்ற சொத்து குறித்து வாதிகள் தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. அந்த சொத்திற்கும் தாவாவிற்கும் எந்த

Digitally signed by R VIJAYAN
R VIJAYAN
Date: 2026.02.17 17:15:12 +0530

தொடர்பு என்பது குறித்து உரிய ஆவணங்களோ அல்லது பட்டாக்களோ தாக்கல் செய்யப்படவில்லை. அந்த சொத்தை பொறுத்து வாதிகள் பாகம் கோருவது ஏற்புடையதாக இல்லை.

24. இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.8 ன் மூலம் இறந்துபோன ராஜி கவுண்டர் என்பவருக்கு வாரிசுகள் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் என்பது தெரியவருகிறது. மேற்படி ராஜி கவுண்டர் பெயரில் தனிப்பட்ட முறையில் வா.சா.ஆ.1 பட்டா எண்.210 ன் படி சர்வே எண்கள்.71/4, 72, 73/1, 74/1 ஆகியவற்றில் மொத்த பரப்பு ஹெக்டேர் 5.74.00 பரப்பு கொண்ட நிலம் சொந்தமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்கள் தான் இவ்வழக்கின் தாவா சொத்துக்களான **1 முதல் 4 வரையிலான** சொத்துக்களாக தாவாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்துக்களை பொறுத்து ராஜி கவுண்டர் உயிருடன் இருக்கும்போது அந்த சொத்துக்களை எந்தவொரு உரிமை மாற்றமோ செய்யப்படவில்லை என்பது வாதி மற்றும் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் தெரியவருகிறது. ஆகவே மேற்படி தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து மட்டுமே வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் ராஜி கவுண்டருக்கு பிறகு அவரது வாரிசுகளாக அடையக்கூடிய சொத்துக்கள் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி சொத்துக்கள் ராஜி கவுண்டர் பெயரில் பட்டா இருப்பதாலும், அந்த சொத்துக்கள் அதற்கு முன்பு அவர்களுடைய கூட்டுக்குடும்ப சொத்திலிருந்து தான் வந்தது என்று எந்த ஆவணங்களும் வாதிதரப்பில் தாக்கல் செய்து நிரூபிக்கப்படவில்லை. அவ்வாறு இருக்கும்போது தாவா 1 முதல் 4 வரையிலான சொத்துக்கள் ராஜி கவுண்டரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்படி சொத்துக்களை பொறுத்து ராஜி கவுண்டர் அவர் உயிருடன் இருக்கும்போது எந்த ஏற்பாடும் செய்துவைக்காமல் இறந்துவிட்டதால் இந்து வாரிசுரிமைச்சட்டம் பிரிவு 8 ன் கீழ் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அந்த சொத்தை



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:15 +0530

அடைவார்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. பிரதிவாதிகள் தரப்பில் சர்வே எண்.71/4 நிலத்தை மொரப்பூரை சேர்ந்த நபர்கள் கிரையம் பெற்று மனைகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டார்கள் என்றும், அப்போது வாதிகள் அவர்கள் பாகத்திற்காக வேண்டி வந்த தொகைகளை தலா ரூ.1,50,000/-ம் பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும், அதற்கான ஆவணம் தான் பி.வா.சா.ஆ.9 சம்மதப்பத்திரம் என்றும், 1ம் வாதிக்கு 1984ல் திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றும், 2ம் பிரதிவாதிக்கு 1991ல் திருமணம் செய்து கொடுத்து அவர் ஈரோட்டில் வசித்து வருகிறார் என்றும், வாதிகளுக்கு திருமணத்தின்போது தலா 30 பவுன் தங்க நகைகளும், இருசக்கர வாகனமும் சீர்வரிசையாக கொடுத்துவிட்டார்கள் என்றும், அதனால் அவர்கள் பாகம் கோர முடியாது என்றும், தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகளின் தகப்பனார் ராஜி என்பவர் தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை 2,3 பிரதிவாதிகளுக்கு பாகமாக விட்டுவிட்டார் என்றும், தாவா 4 வது அயிட்ட சொத்தினை விற்று வாதிகள் வெளியூரில் வசிப்பதால் அதன் மூலம் வந்த தொகையை வாதிகளுக்கு கொடுத்துவிட்டார் என்றும் குறிப்பாக பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. வாதிகளுக்கு திருமணத்தின்போது தங்க நகைகள் மற்றும் சீர்வரிசைகள் செய்யப்பட்டது என்பதால் மட்டுமே அவர்களுக்கு சொத்தில் பாகம் இல்லை என்று கூற முடியாது. மேலும் தாவா 4 வது அயிட்ட ச.எண்.71/4 சொத்தை விற்பனை செய்து தான் வாதிகளுக்கு கொடுக்கப்பட்டது என்பதை காட்டவும் எந்த ஆவணங்களும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே மேற்படி காரணங்களால் வாதிகளுக்கு சொத்து கிடைக்கத்தக்கதல்ல என்று கூறுவது ஏற்புடையதாக இல்லை. மேலும் வாதிகள் திருமணம் செய்த பிறகு அவருடைய கணவர் வீட்டில் வசித்து வந்தார்கள், அதனால் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. இவை குறித்து பார்க்கும்போது வாதிகள்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:18 +0530

திருமணம் செய்து அவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வருவதால் தாவா சொத்தில் கூட்டு அனுபவ உரிமை இல்லை என்று கூற முடியாது. வாதிகளுக்கு அனுமானத்தின் பேரிலான சுவாதீன உரிமை கிடைக்கக்கூடியது. ஆகவே மேற்படி பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை. ஏற்கனவே ஒரு சொத்தை விற்று அதற்காக வாதிகளுக்கு ரூ.1,50,000/- பணம் கொடுக்கப்பட்டது என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. அதற்காக பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.9 சம்மத பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் வாதிகள் குறிப்பாக இவ்வளவு ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டார்கள் என்ற விவரங்கள் எதுவும் அதில் இல்லை. ஏற்கனவே பதிவு செய்யப்பட்டஆவணத்திற்கு சம்மதம் பத்திரம் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை வைத்து வாதிகள் தலா ரூ.1,50,000/- பெற்றுக்கொண்டார்கள் என்று கூறுவதும், அதனால் அவர்களுக்கு பாகம் கிடையாது என்று கூறுவதும் ஏற்புடையதாக இல்லை.

26. வாதி தரப்பு வழக்கறிஞர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பான 2025 (4) TLNJ 15 (Civil) என்ற முன்தீர்ப்பினை சுட்டிகாட்டியுள்ளார். மேற்படி முன்தீர்ப்பின்படி இந்து வாரிசுரிமை (திருத்தச்சட்டம்) 2005 ன்படி பெண்களுக்கும் ஆண்களைபோலவே சமமான சொத்துரிமை உண்டு என்று கூறப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. கையில் உள்ள இவ்வழக்கை பொருத்தவரை தாவா 5 முதல் 15 வரையிலான சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகளின் பிதுராஜ்ஜித சொத்துக்கள் என்று வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் வாதிகள் மற்றும் 2, 3 பிரதிவாதிகளின் தந்தை 1ம் பிரதிவாதியின் கணவருக்கு தனிப்பட்ட சொத்து என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:21 +0530

27. மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் தாவா 5 முதல் 15 வரையிலான அயிட்ட சொத்துக்கள் வாதிகள் மற்றும் 2,3ம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜித சொத்துக்கள் என்று வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் மேற்படி அயிட்ட சொத்துக்கள் வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகளின் தந்தை, 1ம் பிரதிவாதியின் கணவர் ராஜி என்பவருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. ஆகவே மேற்படி 5 முதல் 15 வரையிலான அயிட்ட சொத்துக்கள் சில மேலே விவாதிக்கப்பட்டவாறு 2,3 பிரதிவாதிகளுக்கு அவர்களின் தாத்தா சாமன் (எ) கொளந்தைகவுண்டர் நேரிடையாக தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளதாலும், 1ம் பிரதிவாதியான வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகளின் தாயார் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கி அந்த சொத்துக்களை தானசெட்டில்மெண்ட் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், அந்த சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்கு பாகம் கோர உரிமை இல்லை என்று முடிவு செய்கிறது. தாவா 1 முதல் 4 வரையிலான சொத்துக்கள் ம.சா.ஆ.1 ஆவணத்தின்படி வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகளின் தந்தை 1ம் பிரதிவாதியின் கணவர் ராஜி என்பவருக்கு தனிப்பட்ட சொத்துக்களாக இருப்பதால் அந்த சொத்துக்களை பொறுத்து மட்டும் வாதிகளுக்கு பாகப்பிரிவினை கிடைக்க உரிமை என்றும், தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் மட்டுமே பாகப்பிரிவினைக்கு உட்படுத்த தக்க சொத்து என்றும், மேற்படி சொத்துக்கள் இறந்துபோன ராஜி என்பவரின் தனிப்பட்ட சொத்துக்களாக இந்நீதிமன்றம் முடிவு செய்திருப்பதால் அந்த சொத்துக்களில் இந்திய வாரிசுரிமைச்சட்டம் பிரிவு 8ன் படி வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு சரிசமமாக பாகம் கிடைக்கத்தக்கது என்றும், அதன்படி வாதிகளுக்கு 5ல் 1 பாகமும், வாதிகளுக்கு மொத்தம் 5ல் 2 பாகமும், பிரதிவாதிகளுக்கு தலா 1 பாகமும் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் எழுவினா-1மற்றும் எழுவினா-2 க்கு தீர்வு காண்கிறது.



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:24 +0530

**எழுவினா- 3 : -**

**3. தாவா சொத்தினை பொறுத்து பிரதிவாதிகளுக்கு எதிராக, தாவா சொத்தினை வில்லங்க, பாராதீனங்களுக்கு உட்படுத்தாமல் இருக்க வாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற அருகரா ?**

28. இவ்வழக்கில் வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 5 ல் 2 பாகம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ள நிலையில் இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்படுவதற்கு முன்பு தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் வேறு நபர்களுக்கு யாதொரு விற்பனையும், வில்லங்க பாராதீனமும் செய்துவிட்டால் அது வாதிகளின் நலனை பாதிக்கும். ஆகவே தாவா சொத்துக்களில் 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து இறுதிநிலை தீர்ப்பாணை ஏற்படும் வரையில் பிரதிவாதிகள் வேறு நபருக்கு எந்தவொரு வில்லங்க பாராதீனமும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்று எழுவினா-3 வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

**எழுவினா- 4 : -**

**4. வாதி தரப்பினர்களுக்கு இடையே கிடைக்கத்தக்க பரிகாரம் என்ன ?**

29. எழுவினா-1 முதல் எழுவினா-3 வாதிகளுக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இவ்வெழுவினாவிற்கு விடைக்காணப்படுகிறது.

**முடிவாக,** தாவா பகுதியாக அனுமதிக்கப்பட்டு, 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை நலந்தீது கலந்து 5 சமபாகங்களாக பிரித்து அதில் வாதிகளுக்கு தலா 1 பங்கு (அதாவது வாதிகள் ஒன்று சேர்ந்து 2/5) பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து பிரதிவாதிகள்

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.17 17:15:27 +0530

வழங்கிட முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், அவ்வாறு பிரதிவாதிகள் தாவா சொத்தை பிரித்து தனி சுவாதீனம் வாதிகளுக்கு கொடுக்க தவறும் பட்சத்தில் நீதிமன்றம் மூலம், நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து, தாவா சொத்தை பிரித்துக் கொள்ள தக்க அனுமதியளித்து உத்தரவு பிறப்பித்தும், தாவா சொத்துக்கள் சட்டப்படி பாகம் பிரிக்கப்படும் வரை பிரதிவாதிகள் தாவா சொத்தை வேறு நபர்கள் பெயரில் யாதொரு விற்பனையும் வில்லங்க பாராதீனமும் செய்யாதபடிக்கு பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர உறுத்தக்கட்டளை உத்தரவு பிறப்பித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கு தரப்பினர்களின் நிலையை கருத்தில் கொண்டு, அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.17 17:15:32 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>: -**

| | |
|---|---|
| வா.சா.1 | வள்ளி (2 ம் வாதி) |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>: -**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 06.02.2013 | தாவா 1 முதல் 4 அயிட்டம் சொத்திற்கு வாதிகளின் தகப்பனார் ராஜி என்பவர் பெயரிலுள்ள நில அளவை ஆவண பட்டா - அசல் |
| வா.சா.ஆ.2 | 06.02.2013 | 3 ம் எதிர்வாதி பெயரில் 5 முதல் 10 அயிட்ட சொத்திற்கு உள்ள நில அளவை ஆவண பட்டா - அசல் |
| வா.சா.ஆ.3 | 06.02.2013 | தாவா 11 ம் அயிட்ட சொத்திற்கு 1 ம் எதிர்வாதி பெயரில் உள்ள நில அளவை ஆவண பட்டா - அசல் |



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.02.17 17:15:35 +0530

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 06.02.2013 | தாவா 12 ம் அயிட்ட சொத்திற்கு 2 ம் எதிர்வாதி பெயரில் உள்ள நில அளவை ஆவண பட்டா - அசல் |
| வா.சா.ஆ.5 | 06.02.2013 | தாவா 13 ம் அயிட்ட சொத்திற்கு 3 ம் எதிர்வாதி பெயரில் உள்ள நில அளவை ஆவண பட்டா - அசல் |
| வா.சா.ஆ.6 | --- | தாவா 14, 15 ம் அயிட்ட சொத்திற்கு இறந்த சாமன் (எ) கொளந்தைகவுண்டர் பெயரில் உள்ள சிட்டா - உண்மை நகல் |
| வா.சா.ஆ.7 | --- | OS.No.25/2010 வழக்கின் தாவாபிராது - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | --- | இறந்த ராஜி என்பவரின் வாரிசு சான்றிதழ் - கணினி நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**: -

| | |
|---|---|
| பி.வா.சா.1 | மூவேந்திரன் (2 ம் பிரதிவாதி ) |
| பி.வா.சா.2 | கோதண்டன் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**: -

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 07.03.2007 | தாவா சொத்தின் ஒரு பகுதி குறித்து 2 ம் பிரதிவாதிக்கு அவரது தந்தை வழி தாத்தாவான சாமன் (எ) கொளந்தை கவுண்டர் எழுதி கொடுத்த தானப்பத்திரம் - சான்றிட்ட ஆன்லைன் நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 08.11.1979 | தாவா சொத்தின் ஒரு பகுதிக்கு 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் - சான்றிட்ட ஆன்லைன் நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 03.05.1994 | தாவா சொத்தின் ஒரு பகுதிக்கு 1 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் - சான்றிட்ட ஆன்லைன் நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 22.01.2013 | தாவா சொத்தின் ஒரு பகுதியை 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தானப்பத்திரம் - சான்றிட்ட ஆன்லைன் நகல் |
| பி.வா.சா.ஆ.5 | 14.02.2023 | தாவா சொத்தின் ஒரு பகுதியை 2 ம் பிரதிவாதி அவரது பிள்ளைகளான சென்னகிருஷ்ணன்-1, வெங்கடேசன்-2 ஆகியோர் பெயரில் எழுதி வைத்த தானப்பத்திரம் - சான்றிட்ட ஆன்லைன் நகல் |
| பி.வா.சா.ஆ.6 | --- | 01.01.1985 முதல் 17.08.2025 ம் தேதி வரையிலான தாவா சொத்துக்களுக்கு உண்டான வில்லங்க சான்றிதழ் - கணினி நகல் |



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:40 +0530

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.7 | 18.08.2025 | தாவா சொத்துக்களுக்கு உண்டான சிட்டா (வரிசை 4) பட்டா எண்.875, 762, 588 - **கணினி நகல்** |
| பி.வா.சா.ஆ.8 | 09.04.2010 | வெளாம்பட்டி கிராம சர்வே எண்.82/2 டி3-ல் 1 ஏக்கர் 0.3 சென்ட் நிலத்தை 2 ம் பிரதிவாதியும் அவரது தந்தை ராஜியும் வெங்கடாசலம் மற்றும் செந்தில் ஆகியோருக்கு விற்பனை செய்ததற்கான கிரையப்பத்திரம் - **சான்றிட்ட நகல்** |
| பி.வா.சா.ஆ.9 | 28.04.2010 | வெளாம்பட்டி கிராம சர்வே எண்.82/2 டி3-ல் 1 ஏக்கர் 0.3 சென்ட் நிலத்தை 2 ம் பிரதிவாதியும் அவரது தந்தை ராஜியும் வெங்கடாசலம் மற்றும் செந்தில் ஆகியோருக்கு விற்பனை செய்த பிறகு வாதிகள் மற்றும் 3 ம் பிரதிவாதி ஆகியோர் பெயரையும் சேர்த்து பிழைதிருத்தம் செய்ததற்கான பத்திரம் - **சான்றிட்ட நகல்** |
| பி.வா.சா.ஆ.10 | --- | 20.10.1975 முதல் 20.10.2025 வரையிலான வெளாம்பட்டி கிராம சர்வே எண்.82/2 டி மற்றும் 82/2 டி3 க்கான வில்லங்க சான்றிதழ் - **கணினி நகல்** |

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.02.17 17:15:44 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.